ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
திகதி 2017 ஒத்தோபர் 26

## உரிமம் பெற்ற வங்கிகள் 2020 அளவில் குறைந்தபட்ச மூலதனத்தை உயர்த்துதல்

பலமானதும் இயலாற்றல் மிக்கதுமான வங்கித்தொழில் துறையை உறுதிப்படுத்தும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்திருக்கிறது. இந்நோக்கத்திற்காக கருத்திலெடுக்கப்பட்ட மூலதனமானது உயர் இழப்புக்களை ஈர்க்கும் இயலளவுள்ள உயர்தர மூலதனத்தினால் பெருமளவு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளை உயர்த்துவது வங்கிகளின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை பலப்படுத்துவதற்காக இலங்கையில் பாசல் III இனை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் என்பதுடன் வங்கித்தொழில் துறையின் திரட்சிப்படுத்தலுக்கும் வழிவகுக்கும். இதன்படி, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், இலங்கையில் நிறுவப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட இருக்கும் புதிய வங்கிகள் பின்வரும் மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன:

### புதிய வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்

| வங்கி வகை | குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் (ரூ.பில்) |
|---|---|
| உள்நாட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 20 |
| உள்நாட்டு உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் | 7.5 |
| இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகள் (வெளிநாட்டு வங்கிகள்) | 10 |

ஏற்கனவேயிருக்கும் வங்கிகள் மூலதனத்தை அதிகரிக்கவும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யவும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதி வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில்,

வங்கிகள் புதிய மூலதனத்தை உட்புகுத்தும் திட்டங்களைத் தயாரிக்கவும் நடைமுறைப்படுத்தவும் அத்துடன் தேவையேற்படின் மீள்கட்டமைப்பதற்கு அல்லது ஒன்றிணைப்பதற்கு அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றன. இதன்படி, 2020.12.31 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஏற்கனவேயிருக்கும் வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு கீழ்வருமாறு:

**ஏற்கனவேயிருக்கும் வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்**

| வங்கி வகை | குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் (ரூ.பில்) |
|---|---|
| உள்நாட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 20 |
| உள்நாட்டு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 7.5 |
| வெளிநாட்டு வங்கிகள் | |
| • ரூ.100 பில்லியன் வரையான சொத்துக்களைக் கொண்டவை | 05 |
| • ரூ.100 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்டவை | 10 |

இவ்வதிகரிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடானது வலுவான வங்கிகளுக்கு வழிவகுக்கும் எனவும் இதனால் வங்கித்தொழில் முறைமையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மற்றும் உறுதித்தன்மையையும் தேசியப் பொருளாதார நலனையும் பாதுகாக்க முடியுமென இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.